# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **இந்தியா சுதந்திரம் பெற்றது வரை**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## இந்தியா சுதந்திரம் பெற்றது வரை

### ஐரோப்பியர்கள் வருகை

- கி.பி. (பொ.ஆ) 1453 ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமான நிலவழி மூடப்பட்டது.
- துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது.

### போர்ச்சுக்கல்

- ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் போர்ச்சுகல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
- போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக மாலுமி ஹென்றி என அறியப்படுகின்றார்.
- 1487 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார்.
- மன்னர் இரண்டாம் ஜான் அவரை ஆதரித்தார்.

### வாஸ்கோடகாமா

- வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து, அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.
- இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி.(பொ.ஆ.) 1498 ல் கள்ளிக்கோட்டையை அடைந்தார்.
- அவரை மன்னர் சாமரின் வரவேற்றார்.
- இரண்டாவது போர்ச்சுக்கீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப்

பின்பற்றி 13 கப்பல்களில் சில வீரர்களுடன் 1500 ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.

- வாஸ்கோடகாமா 1501 ல் 20 கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
- பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார்.
- இதனால் கோபம் கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரை தாக்கி, தோற்கடிக்கப்பட்டார்.
- பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.
- 1524 ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524 ல் கொச்சியில் காலமானார்.

**பிரான்சிஸ்கோ அல்மெய்டா** (1505-1509)

- இந்தியாவில் இருந்த போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு 1505 -ல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவார்.
- இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை “ நீலநீர்க்கொள்கை” எனப்பட்டது.

**அல்போன்ஸா -டி-அல்புகர்க்** (1509-1515)

- இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்ஸா -டி-அல்புகர்க் ஆவார்.
- அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510 ல் கோவாவைக் கைப்பற்றினார்.

**நினோ-டி-குன்கா** (1529-1538)

- அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530-ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.

- 1534-ல் குஜராத்தின் பகதுார்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார்.
- போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர்.
- 1556-ல் போர்த்துக்கீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.
- அச்சு இயந்திரத்தின் உதவியால் ஓர் ஐரோப்பிய எழுத்தாளர் 1563ல் கோவாவில் "இந்திய மருத்துவ தாவரங்கள்" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.
- 17 ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் படிப்படியாக டச்சுவிடம் வீழ்ச்சியடைந்தது.

**<u>டச்சுக்காரர்கள்</u>**

- டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகு அவர்களின் வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினம் என்ற இடத்தில் நிறுவினர்.
- இந்தியப் பொருட்களான பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி, மற்றும் அபினி ஆகியவை டச்சுக்காரர்கள் வர்த்தகம் செய்த பொருட்களாகும்.
- 1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்களால் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர்.
- பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613-ல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர்.
- இந்தக் கோட்டை ஒரு காலத்தில் டச்சு அதிகார மையத்தின் இருப்பிடமாக இருந்தது.
- நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை(PORTO NOVO) கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுக்காரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

## ஆங்கிலேயர்கள்

- இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற்கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதி பட்டயம் வழங்கினார்.
- 1608-ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பி வைக்கப்பட்டார்.
- ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611-ல் நிறுவினர்.
- இது கோல்கொண்டா அரசின் ஒரு முக்கிய துறைமுகமாகும்.
- 1639-ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார்.
- அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது.
- 1690-ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது. சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698-ல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.
- 1757-ல் பிளாசிப் போர் மற்றும் 1764-ல் பக்சார் போருக்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது.

## டேனியர்கள்


- டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் 1616 மார்ச் 17-ல் ஒரு பட்டயத்தை வெளியிட்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்கினார்.

- Ø அவர்கள் 1620-ல் தரங்கம்பாடி (தமிழ்நாடு), 1676-ல் செராம்பூர்(வங்காளம்) ஆகிய இடங்களில் குடியேற்றங்களை நிறுவினர்.
- Ø செராம்பூர், டேனியர்களின் இந்தியத் தலைமையிடமாக இருந்தது.
- Ø தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர்.
- Ø சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார்.
  - Ø அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார்.
- Ø பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம், மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664-ல் உருவாக்கப்பட்டது.
- Ø வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.
- Ø இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் சூரத் நகரில் நிறுவினார்.
- Ø 1669-ல் மார்காரா என்பவர் கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.
- Ø 1742-ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார்.

**<u>கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்</u>**

- Ø காலனி ஆதிக்கத்திற்கு முன் இந்தியப் பொருளாதாரமானது வேளாண்மையை அடிப்படையாக கொண்ட பொருளாதாரமாக இருந்தது.
- Ø இக்காலத்தில் வேளாண்மை மக்களின் முதல்நிலைத் தொழிலாக இருந்தது.
- Ø நிலையான நில வருவாய் திட்டம், மகல்வாரி திட்டம், இரயத்துவாரி திட்டம் என்னும் மூன்று பெரிய நிலவருவாய்

மற்றும் நில உரிமை திட்டத்தை ஆங்கில அரசு இந்தியாவில் அறிமுகப்படுத்தியது.




## விவசாயிகளின் புரட்சிகள்

- சந்தால் கலகம் (1855-1956)
- இண்டிகோ கலகம் (அவுரி புரட்சி -1859-1960)
- பாப்னா கலகம் (1873-1976)
- தக்காண கலகம் (1875)
- பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் (1890 - 1900)
- சம்பரான் சத்தியாகிரகம் (1917-1918)

# வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

- 15-ஆம் நூற்றாண்டில் நிலவழியாகவும், கடல் வழியாகவும், புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாக ஐரோப்பா விளங்கியது.
- 1498-ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல்வழியை கண்டுபிடித்தார்.

## ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நிறுவப்படுதல்

### பிளாசிப்போர்

- 1757- ஜூன்-23
- சிராஜ்-உத்-தௌலா, பிரெஞ்ச் கூட்டணி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிய கிழக்கிந்திய கம்பெனியின் படைகள் வெற்றி பெற்றன.
- பிளாசிப்போர் வெற்றி ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தது மட்டுமல்லாமல், அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு அவர்களது ஆதிக்கத்தை நீடிக்கவும் செய்தது.


### பக்சார் போர்

- 1764- அக்டோபர் 22.
- சுஜா-உத்-தௌலா, இரண்டாம் ஷா-ஆலம், மீர்காசிம் / ஆங்கிலப் படைத்தளபதி ஹெக்டர் மன்றோ இடையே நடைபெற்றது.
- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி வெற்றி பெற்றது.
- 1765 பிப்ரவரி 20-ல் நடந்த அலகாபாத் உடன்படிக்கையின் படி பக்சார் போர் முடிவுக்கு வந்தது.

- இராபர்ட் கிளைவ் அயோத்தி நவாப் சுஜா-உத்-தௌலா உடனும், முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா-ஆலத்துடனும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார்.
- இவ்வாறாக இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டை ஆட்சி முறையை கொண்டு வந்தார்.

**<u>கர்நாடகப் போர்கள்</u>**

1746 முதல் 1763 வரை நடைபெற்றது. இப்போர்களின் விளைவாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் அதிகாரம் வலுப்பெற்றது.



## அடையாறு போர்

- 1746
- சென்னையின் அடையாறு நதிக்கரையில் அமைந்துள்ள சாந்தோம் என்ற இடத்தில் கர்நாடக நவாப் அன்வர்தீனுக்கும், பிரெஞ்ச் படைக்கும் இடையே இப்போர் நடைபெற்றது.
- நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பிய படை இந்தியப் படையை வெற்றி பெற்று தங்கள் மேலாண்மையை நிலைநாட்டிய முதல் நிகழ்வு இதுவே ஆகும்.

## ஆம்பூர் போர்

- 1749 ஆகஸ்ட் 3.
- பிரெஞ்ச் கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வர்தீன் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
- இதன் மூலம் டியூப்ளேயின் அதிகாரம் உச்ச நிலையை அடைந்தது.

## ஆற்காட்டுப் போர்

- 1751
- ஆங்கிலப் படைக்கும், பிரெஞ்ச் படைக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- இத்தோல்வியால் பிரான்ஸ் நாட்டு அரசாங்கம் டியூப்ளேவை பாரிசுக்கு திரும்ப அழைத்தது.

## வந்தவாசிப் போர்

- 1760 சனவர் 22.

- ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படைக்கும் லாலி தலைமையிலான பிரெஞ்சுப் படைக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

## முதல் ஆங்கிலேய மைசூர் போர்

- 1767 - 1769
- ஆங்கிலப் படைக்கும் ஹைதாரபாத் நிஜாமுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலப் படை தோல்வி.
- 1769 ஏப்ரல் 4-ல் மதராஸ் உடன்படிக்கை போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

## இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர்

- 1780- 1784
- ஆங்கிலேயருக்கும், ஹைதர் அலி, ஹைதாரபாத் நிஜாம், மராத்தியர்களுக்கும் (முக்கூட்டணி) இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயப் படை வெற்றி பெற்றது.
- 1784 மார்ச் 7-இல் மங்களூர் உடன்படிக்கை போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.

## மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர்

- 1790-1792
- ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலப் படை வெற்றி பெற்றது.
- 1792-இல் ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

**<u>நான்காம் ஆங்கிலேய மைசூர் போர்.</u>**

- 1799.
- ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.
- திப்பு சுல்தானின் மரணம் இப்போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.

ஆங்கிலேய மாராத்திய போர்கள்.

| முதல் ஆங்கிலேய மராத்திய போர் | இரண்டாம் ஆங்கிலேய மராத்திய போர் | மூன்றாம் ஆங்கிலேய மராத்திய போர் |
|---|---|---|
| 1775-1782 | 1803-1805 | 1817-1818 |

**<u>இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு</u>**

- ஆங்கிலேயரின் இந்திய நிர்வாக அமைப்பு நான்கு முதன்மை நிறுவனங்களாக இயங்கியது.
- அவை குடிமைப்பணிகள், இராணுவம், காவல் மற்றும் நீதித்துறை ஆகும்.

**<u>குடிமைப்பணிகள்</u>**

- சிவில் சர்வீஸ் (குடிமைப் பணிகள்) என்ற வார்த்தை முதன் முதலில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் பயன்படுத்தப்பட்டது.

- சட்டங்களை முறையாக செயல்படுத்துதல், வரி வசூலித்தல் ஆகியன குடிமைப் பணியில் முதன்மைப் பணியாக இருந்தது.
- 1786-இல் தலைமை ஆளுநராக காரன்வாலிஸ் பதவியேற்ற போது தனியார் வணிகத்திற்கு எதிராக சட்டங்களை இயற்றினார்.
- 1798-இல் இந்திய கவர்னர் ஜெனரலாக பதவியேற்றுக் கொண்ட வெல்லெஸ்லி பிரபு அரசு ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியை அறிமுகப்படுத்தினார்.
- 1800-இல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையில் மொழி, இலக்கியம், அறிவியல் ஆகிய துறையில் பயிற்சி வழங்குவதற்காக ஒரு கல்லூரியை நிறுவினார். கம்பெனியின் இயக்குநர்கள் இதனை ஏற்க மறுத்து 1806-இல் இங்கிலாந்தில் உள்ள ஹெய்லிபரி என்ற இடத்தில் கிழக்கிந்தியக் கல்லூரியை நிறுவினர்.
- போட்டித்தேர்வு மூலம் அரசு ஊழியர் நியமனம் என்ற கருத்தை முதன் முதலில் 1833-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் அறிமுகப்படுத்தியது.
- திறந்த முறையிலான போட்டித்தேர்வு முறையில் கம்பெனி ஊழியர்களை தேர்ந்தெடுப்பது 1853-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை 1858-ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தால் உறுதி செய்யப்பட்டது.
- போட்டித்தேர்வுகளுக்கான அதிக பட்ச வயது 23 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1858-ஆம் ஆண்டு ஹெய்லிபரியில் இருந்த கிழக்கிந்திய கல்லூரி அகற்றப்பட்டது.
- குடிமைப் பணிக்கு ஆட்களை தேர்வு செய்யும் பொறுப்பு குடிமைப்பணியாளர் தேர்வாணையம் வசமானது.
- 1860-ஆம் ஆண்டு ஒரு ஒழுங்குமுறை ஆணையம் மூலம் தேர்வெழுத அதிகபட்ச வயது 22 ஆக குறைக்கப்பட்டது. மேலும், 1866-இல் 21- ஆகவும் 1876-இல் 19 ஆகவும் குறைக்கப்பட்டது.
- 1861-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்திய ஆட்சிப் பணி சட்டம் இயற்றப்பட்டது. வயது வரம்பு குறைத்தல் மற்றும் லண்டனுக்கு சென்று தேர்வு எழுதுதல் ஆகிய காரணங்களால்

வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமே ஐ.சி.எஸ் தேர்வு எழுதக் கூடிய சூழ்நிலை உருவானது.

- 1869-இல் சுரேந்திரநாத் பானர்ஜி, ரமேஷ் சந்திர தத் மற்றும் பிகாரி லால் குப்தா ஆகிய மூன்று இந்தியர்கள் ஐ.சி.எஸ் தேர்வில் வெற்றி பெற்றனர்.
- 1863-இல் ஐ.சி.எஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரவீந்திரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார்.
- 1892-இல் ஐ.சி.எஸ் தேர்விற்கான வயதுவரம்பு 21-இல் இருந்து 23 ஆக உயர்த்தப்பட்டது.
- 1912-இல் அரசு பணியை பற்றி ஆராய்வதற்கு இஸ்லிங்டன் பிரபு என்பவரின் தலைமையில் ஒரு அரச ஆணையம் (ராயல் கமிஷன்) நிறுவப்பட்டது.
- இதன் உறுப்பினர்களாக இந்தியர்களான கோபால கிருஷ்ண கோகலே, சர் அப்துர் ரஹிம் மற்றும் நான்கு ஆங்கிலேயர்கள் இடம்பெற்றிருந்தனர்.
- 1918-இல் இந்திய ஆட்சிப்பணியில் 33 சதவீத இந்தியர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றும் படிப்படியாக இவற்றை அதிகரிக்கவும் மாண்டேகு மற்றும் செம்ஸ் போர்டு ஆகியோர் பரிந்துரைத்தனர்.
- 1923-இல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு அரச ஆணையத்திற்கு லீ பிரபு தலைவராக நியமிக்கப்பட்டார். இது இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல்பணி, இந்திய காடுகள் பணி ஆகிய அனைத்து நியமனங்களும் இந்தியாவுக்கான அரசு செயலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.
- அரசு பணியாளர் தேர்வாணையம் ஒன்றை உடனடியாக நிறுவுவதற்கும், லீ தலைமையிலான குழு பரிந்துரை செய்தது.
- 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மத்தியில் கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும், மாகாணங்களில் - மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும் உருவாக வழிவகை செய்தது.

## இராணுவம்

- இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கியத் தூணாக விளங்கியது.
- கிழக்கிந்திய கம்பெனி தன்னுடைய இராணுவத்திற்கு ஆட்களை சேர்த்தது. அதற்கு சிப்பாய் இராணுவம் என்று பெயர்.
- இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை நிறுவுவதிலும், விரிவுபடுத்துவதிலும் இராணுவத்தின் பங்களிப்பு சிறப்பானதாகும்.

## காவல்துறை

- இந்தியாவில் முதன்முதலில் காவல்துறையை உருவாக்கியவர் காரன்வாலிஸ் பிரபு ஆவார்.
- ஜமீன்தார்களை காவல் பணிகளிலிருந்து விடுவித்த காரன்வாலிஸ் 1791-இல் முறையான காவல்துறையை உருவாக்கினார்.
- 1808-இல் மாவட்ட கண்காணிப்பாளர் பதவி நியமிக்கப்பட்டது.

## நீதித்துறை அமைப்பு

- 1772-இல் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு வரிவசூல் செய்வதையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஏற்றுக்கொண்டது.
- அதன் விளைவாக சிவில் நீதிமன்றம் என்று அழைக்கப்பட்ட திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் என்று அழைக்கப்பட்ட பௌஜ்தாரி அதாலத் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.
- 1773-ஆம் ஆண்டு ஒழுங்குமுறை சட்டத்தின் படி கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது.
- 1801-இல் மதராஸிலும், 1823-இல் பம்பாயிலும் உச்சநீதிமன்றங்கள் நிறுவப்பட்டன.
- 1832-இல் வில்லியம் பெண்டிங் பிரபு ஜூரி முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார்.
- வங்காளத்தில் வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.

- Ø மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாரூர் முத்துச்சாமி ஆவார்.

**<u>துணைப்படைத் திட்டம்</u>**

- Ø 1798- இல் வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- Ø வெல்லெஸ்லி பிரபு “இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு” என்பதை “ இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு” என்று மாற்றினார்.
- Ø துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் நாடு ஹைதராபாத். (1798)

**<u>வாரிசு இழப்புக் கொள்கை</u>**

- Ø 1848-இல் டல்ஹௌசி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- Ø 1857-ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.
- Ø வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக்கொண்ட பகுதிகள் - சதாரா (1848), ஜெய்த்பூர், சம்பல்பூர்(1849), பகத்(1850), உதய்ப்பூர்(1852), ஜான்சி(1853) மற்றும் நாக்பூர்(1854)

**<u>இந்தியாவில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்</u>**

- Ø மிகப்பெரிய கடல் வலிமை.
- Ø நெசவுத் தொழில் வளர்ச்சி
- Ø அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்
- Ø பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜ தந்திரம்.
- Ø இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள், இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை.

*************

**வாரன்ஹேஸ்டிங்ஸ்** (1772-1785)

- ஆங்கிலேயர் கிழக்கிந்திய வணிகக்குழு- 1600-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் நிறுவப்பட்டது.
- இதற்கான அரசப் பட்டயத்தை இங்கிலாந்து அரசி **முதலாம் எலிசபெத்** வழங்கினார்.
- 1639-**ல் பிரான்சிஸ் டே** என்பவர் சென்னையை நிறுவி அங்கு **செயின்ட் ஜார்ஜ் கோட்டையை** அமைத்தார்.
- 1690-**ஆம் ஆண்டு ஜாப் சார்னாக்** என்ற வணிகக் குழுவின் **முகவர் சுதநூதி**, **கோவிந்தபூர்**, **காளிகட்டம்** என்ற மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினார்.
- 1772-ஆம் ஆண்டு வணிகக் குழு வில்லியம் கோட்டையின் ஆளுநராக **வாரன் ஹேஸ்டிங்கை** நியமித்தது.

**வாரன் ஹேஸ்டிங்கின் சீர்திருத்தங்கள்**

- **இராபார்ட் கிளைவ்** அறிமுகப்படுத்திய **இரட்டை ஆட்சி முறை** ஒழிக்கப்பட்டது.
- வரி வசூல் செய்யும் பொறுப்பை வணிக குழுவே ஏற்றது.
- கருவூலம் **மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு** மாற்றப்பட்டது.
- **கல்கத்தா** 1772-**இல்** வங்காளத்தின் தலைநகராகியது.
- **தஸ்தக்குகள்** எனப்பட்ட இலவச அனுமதிச் சீட்டுக்களை ஒழித்தார்.
- கல்கத்தாவில் ஒரு வங்கி தோற்றுவிக்கப்பட்டது.

**<u>ஒழுங்குமுறை சட்டம்</u>**<u>(1773)</u>

- இச்சட்டம் வணிகக்குழுவின் அரசியல் அமைப்பு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆகும்.
- 1774-ஆம் ஆண்டு அரச பட்டயத்தின் படி உச்சநீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.
- தலைமை ஆளுநருக்கு போதிய அதிகாரம் அளிக்கப்படவில்லை.
- **ரோஹில்லா போர் நடைபெற்ற ஆண்டு**(1774)
- மாரத்திய பகுதிகளுக்கும், அயோத்திக்கும் இடையே இருந்த ஒரு சிறு அரசு ரோகில்கண்ட். இதன் ஆட்சியாளர் **ஹபிஸ் ரகமத் கான்**.
- பின்னர் 1782 -ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாஜதி சிந்தியா இருவருக்குமிடையே சால்பாய் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

- **பிட் இந்தியச் சட்டம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு** 1784.
- வங்காள நவாப்பின் அன்னையும், பாட்டியும் **அயோத்தி பேகம்கள்** எனப்பட்டனர்.

**<u>காரன் வாலிஸ் பிரபு</u>** <u>(1786-1793)</u>

- வாரன்ஹேஸ்டிங்ஸ் பிரபுவைத் தொடர்ந்து 1786-ல் தலைமை ஆளுநராக பதவியேற்றார்.
- மூன்றாம் மைசூர் போர்
- நடந்த ஆண்டு (1790- 1792)
- ஆங்கிலேயருக்கும் .திப்பு சுல்தானுக்கும் இடையே நடைபெற்றது.
- ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை வாயிலாக போர் முடிவு.
- இந்திய ஆட்சி பணித்துறைக்கு அடித்தளம் அமைத்தவர்
- நீதித்துறையை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டவர், **நீதிபதி சர் வில்லயம்ஸ் ஜோன்ஸ்**.

- Ø காரன் வாலிஸ் தனது சகப் பணியாளரான **ஜார்ஜ் பார்லோ** என்பவரின் உதவியுடன் ஒரு முழுமையான சட்டத்தை உருவாக்கினார்.
- Ø காரன் வாலிஸ் பிரபுவின் மிக முக்கியமான நிர்வாக சீர்திருத்தம் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய நிலையான **நிலவரித் திட்டமாகும்**.

**வெல்லஸ்லிப் பிரபு** (1798-1805)

- Ø **ரிச்சார்ட் கோலிவெல்லஸ்லி** தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டது பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும்.
- Ø பேரரசு கொள்கையுடைய அவர் தம்மை " **வங்கப்புலி**" என்று கூறிக்கொண்டார்.
- Ø பிரிட்டிஷ் இந்தியப் பேரரசில் ஒன்றை உருவாக்க வேண்டும் என அவர் பின்பற்றிய திட்டம் **துணைப்படைத் திட்டம்**.
- Ø துணைப்படைத் திட்டம் 1798-**இல் ஹைதாரபாத்தில்** அறிமுகப்படுத்தப் பட்டது.
- Ø துணைப்படைத்திட்டத்திற்கு உட்படாத ஒரே பகுதி **மாராத்தியம்**.
- Ø மாரத்தியார்களின் தலைவர் **நானா பட்னாவிஸ்**.
- Ø **பசீன் உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு** 1802.
- Ø பசீன் உடன்படிக்கை துணைப்படைத்திட்டத்தின் மணிமகுடம்.
- Ø இரண்டாம் மாராத்திய போர் நடைபெற்ற ஆண்டு 1803-1805.

**ஹேஸ்டிங்ஸ் பிரபு** (1813-1823)

- Ø இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை முதன்மையானதாக உண்மையில் மாற்றியவர் இவரே.
- Ø **சகௌலி உடன்படிக்கை ஏற்பட்ட ஆண்டு** 1816.
- Ø 1824-**ல் பிண்டாரிகளை** ஒடுக்கினார்.

- மாராத்திய கூட்டினணயை முறியடித்தார்.
- 3-ஆம் மாராத்திய போர் நடைபெற்ற ஆண்டு. 1817.
- ஆங்கிலம் மற்றும் மேலை நாட்டு அறிவியல் கல்விக்காக **கல்கத்தாவில்** பொதுமக்களால் **இந்து கல்லூரி** 1817-**ல்** நிறுவப்பட்டது.
- இக்கல்லூரியின் புரவலராக இருந்தவர் **ஹேஸ்டிங்ஸ் பிரபு**.
- 1818-ல் சீராம்பூர் சமயபரப்பாளரான **மார்ஷ்மேன்** என்பவரால் "**சமாச்சார் தார்பன்**" என்ற வங்காள மொழி வார இதழ் தோற்றுவிக்கப்பட்டது.
- **ஹேஸ்டிங்ஸ் பிரபு பம்பாய் மாகாணத்தை** உருவாக்கினார்.
- மாரத்தியரை வீழ்த்தினார்.
- **கூர்க்கர்களின்** கொட்டத்தை நசுக்கினார்.

**<u>வில்லியம் பெண்டிங் பிரபு</u>** <u>(1828-1835)</u>

- 1803-**ஆம்** அண்டு சென்னையின் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார்.
- இந்திய மக்களின் நலனைப் பேணுவதே இந்தியாவில் ஆளும் பிரிட்டிஷாரின் தலையாய கடமை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட முதல் தலைமை ஆளுநர்.
- 1833- **ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்**. கிழக்கிந்திய வணிகக்குழுவின் அதிகார வரம்பெல்லையை வரையறை செய்தது. இச்சட்டத்தின் விதிகள் பெந்தாம் என்பவரின் தாராள மற்றும் பயன்பாட்டு தத்துவங்களை உள்ளடக்கியது.
- இந்தியாவின் **முதல் தலைமை ஆளுநர்** வில்லியம் பெண்டிங் பிரபு.
- தலைமை ஆளுநரின் ஆலோசனை குழுவில் நியமிக்கப்பட்ட **முதல் சட்ட உறுப்பினர் டி**.பி.**மெக்காலே**.

**<u>சீர்திருத்தங்கள்</u>**

- இராணுவத்துறையில் நடைமுறையில் இருந்த இரட்டை படி முறையை ஒழித்தார்.
- கீழ்மட்ட நீதிமன்றங்களில் அந்தந்த பகுதியின் மொழிகளிலேயே வழக்குகள் நடைபெற அனுமதித்தார்.
- உயர்மட்ட நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சதிமுறையை ஒழித்தார்.
- தக்கர்களை ஒடுக்கினார். தக்கர்களுக்கு எதிரான நடவடிக்கையை கர்னல் சீலிமேன் என்பவர் தொடங்கி இப்பணியினை திறமையுடன் செய்த காரணத்தால் " தக்கீ சிலீமேன்" என்று அழைக்கப்பட்டார்.
- பெண் சிசு கொலை தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டார்.
- ஆங்கில கல்வி முறையை அறிமுகப்படுத்தினார்.
- கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

**<u>டல்ஹௌசி பிரபு</u>** <u>( 1848- 1856)</u>

- டல்ஹௌசி ஆட்சிக்காலத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் அவர் நடத்திய நாடு இணைப்பு கொள்கையே ஆகும்.
- வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தார்.
- இக்கொள்கையை பயன்படுத்தி 1848-ல் "சதாரா" பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக்கொண்டார்.
- 1854-இல் ஜான்சி, நாக்பூர் இணைக்கப்பட்டது.
- மத்திய மகாணங்களில் பெரும்பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கட்டுப்பாட்டில் வந்தது. 1861-இல் முதன்மை ஆணையரின் தலைமையில் நிர்வகிக்கப்பட்டது.

- 1857- ஆம் ஆண்டு பெரும் கலகத்திற்கு பிறகு வாரிசு இழப்பு கொள்கை திரும்ப பெறப்பட்டது.

**சீர்திருத்தங்கள்**

- இந்தியாவின் வரைபடத்தையே மாற்றியமைத்தார்.
- சீரமைக்கப்படாத அமைப்பு என்ற திட்டத்தை அமைத்தார்.
- இரயில் பாதைகளை அறிமுகப்படுத்தினார்.
- 1853-இல் இரயில்வே அறிக்கை ஒன்றை தானே தயாரித்தார்.
- பம்பாயிலிருந்து - தானே வரை செல்லும் முதல் இரயில் பாதை 1853-இல் தொடங்கப்பட்டது.
- கல்கத்தாவையும், ராணிகஞ்ச் நிலக்கரி சுரங்கத்தையும் இணைக்கும் இரயில் பாதை 1854-ஆம் ஆண்டிலும், சென்னை அரக்கோணம் இடையிலான இரயில் பாதை 1856-ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன.
- (உலகின் முதல் இரயில் பாதை 1825-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது)
- தபால் தந்தி முறையை அறிமுகப்படுத்தினார்.
- 1852-ஆம் ஆண்டு ஓ ஷாகன்னசே என்பவர் தந்தி துறையின் முக்கிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
- கல்கத்தா, பெஷாவர், பம்பாய், சென்னை போன்றவை தந்தி மூலம் இணைக்கப்பட்டன.
- தற்கால அஞ்சல்துறைக்கு அடித்தளம் அமைத்தவர் இவரே.
- 1854-இல் புதிய அஞ்சலக சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- அஞ்சல்தலைகளும் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன.
- சர் சார்லஸ் உட் என்பவரின் 1854-ஆம் ஆண்டு “கல்வி அறிக்கை” “இந்தியாவின் அறிவுபட்டயம்” என கருதப்படுகிறது.
- கல்கத்தா, பம்பாய், சென்னை பல்கலைக்கழகங்கள் 1857-ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

- பொதுப்பணித்துறையை ஏற்படுத்தினார்.
- அத்துறையை நவீனப்படுத்தியதன் மூலம் இந்தியாவின் பொறியியல் பணித்துறைக்கு டல்ஹௌசி அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.
- இரயில் பாதை மற்றும் தந்தித் துறைகளின் தந்தை என்றும் நவீன இந்தியாவை உருவாக்கியவர் என்றும் புகழப்படுகிறார்.

**<u>பாளையங்களின் தோற்றம்</u>**

- விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். இதையொட்டி மதுரை நாயக்கர் பாளையக்காரரை நியமித்தார்.
- 1529 ல் விஸ்வநாதர் மதுரை நாயக்கரானார்.
- அதன்மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார்.

**<u>தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்</u>**

- 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அரசியலில் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.
- பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன. அவை கிழக்கு பாளையம் (முகாம்), மேற்கு பாளையம் (முகாம்) என்பன ஆகும்.
- கிழக்கு பாளையங்களில் இருந்த நாயக்கர்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர்.

- மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் பூலித்தேவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். இந்த இரண்டு பாளையக்காரர்களும் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்ட மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1792 ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட்டது.

## பாளையக்காரர் கிளர்ச்சி

- தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சி விரிவுப்படுத்தப்பட்ட போது பாளையக்காரர் முறை வளர்ச்சி பெற்றது.
- பாளையம் என்று அழைக்கப்பட்ட ஒருசில கிராமங்களை உள்ளடக்கிய நிலப்பகுதிக்கு உரிமையாளர் **பாளையக்காரர்** என்று அழைக்கப்பட்டார்.
- இவர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர்.
- மேற்குப்பிரிவில் மறவர் பாளையக்காரர்களும், தெற்குப் பிரிவில் தெலுங்கு பாளையக்காரர்களும் இருந்தனர்.

## பூலித்தேவர்

- நெல்கட்டும் செவல் பாளையத்தின் மறவர் பிரிவின் தலைவர்.
- 1755-**இல் மாபெஸ்கான்**, பிரிட்டிஷ் படைத்தளபதி **கர்னல் ஹெரான்** தலைமையிலான படைகளின் உதவியோடு பாளையக்காரர்கள் மீது படையெடுத்தார்.
- பூலித்தேவர் மதுரையை தாக்கி **மாபெஸ்கானிடமிருந்து** அதனை கைப்பற்றினார். பூலித்தேவரின் இந்த இராணுவ வெற்றி மகத்தானதாகும்.

- ஒரு இந்திய வீரர் பிரிட்டிசாருக்கு எதிராக நின்று வெற்றிக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
- தென்னிந்திய வரலாற்றில் சுதந்திர போராட்டத்தை துவக்கிய பெருமைக்கு உரியவர் **பூலித்தேவர்**.

**<u>வீரபாண்டிய கட்டபொம்மன்</u>**

- பாஞ்சாலங்குறிச்சியை சேர்ந்த தெலுங்குப் பிரிவின் தலைவர்.
- கட்டபொம்மனுக்கும் கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கும் கப்பம் கட்டுவது தொடர்பாக சச்சரவுகள் தோன்றின.
- 1792-ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையின்படி ஆர்காடு நவாப் இந்த உரிமையை ஆங்கிலேயருக்கு கொடுத்திருந்தார்.
- 1798-இல் கட்டபொம்மன் கட்ட வேண்டிய கப்பம் நிலுவையில் இருந்தது.
- கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனுக்கு மிரட்டல் கடிதங்களை அனுப்பினார்.
- வானம் பொழிகிறது, பூமி விளைகிறது எதற்காக நாங்கள் ஆங்கிலேயருக்கு வரி கட்ட வேண்டும் என கட்டபொம்மன் கூறியதாக வழக்காறு உள்ளது.
- 1798- மே 31-ஆம் நாள் கணக்குப்படி கட்டபொம்மன் கட்டவேண்டிய கப்பத்தொகை வழக்காறு நிலுவை 3310 பகோடக்களாகும்.(பகோடா என்பது ரூபாய்).
- 1799- மே திங்கள் சென்னையிலிருந்த வெல்லெஸ்லி பிரபு திருச்சி, தஞ்சை, மதுரை போன்ற இடங்களில் இருந்த பிரிட்டிஷ் படைகளை திருநெல்வேலிக்கு செல்ல உத்தரவிட்டார்.
- மிகுந்த அதிகாரங்களை பெற்ற **மேஜர் பானர்மேன்** இப்படையெடுப்புக்கு தலைமை வகித்தார்.
- விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினார்.

- கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாக செயல்பட்டார்.
- பாஞ்சாலங்குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**<u>கட்டபொம்மன்-ஜாக்சன் சந்திப்பு</u>**

- இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798ல் நிலுவைத் தொகையை செலுத்தச் சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார்.
- 1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார்.
- 1080 பகோடா பாக்கியை தவிர பெரும்பாலான வரியை கட்டபொம்மன் செலுத்திவிட்டதை கணக்குகள் சரிபார்த்தலுக்குப்பின் அறிந்த ஜாக்சன் சமாதானமடைந்தார்.
- கலெக்டர் ஜாக்சன் அவருடைய தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கமும் செய்யப்பட்டார்.
- அவருக்குப்பின் கலெக்டராக எஸ்.ஆர்.லூஷிங்டன் நியமிக்கப் பட்டார்.

**<u>பாளையக்காரர்களின் கூட்டமைப்பு</u>**

- சிவகங்கையின் மருது பாண்டியார், அருகில் இருந்த பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கினர்.
- இந்த கூட்டமைப்பு ஓர் பிரகடனத்தை வெளியிட்டது. அது திருச்சிராப்பள்ளி அறிக்கை என அழைக்கப்பட்டது.

**<u>பாஞ்சாலங்குறிச்சி வீழ்தல்</u>**

- 1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் மேஜர் பானர்மேன் தன்னுடைய படையை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நகர்த்தினார்.
- கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார்.
- களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் கைது செய்து கம்பெனியிடம் ஒப்படைத்தார்.
- நாகலாபுரத்தில் சிவசுப்பிரமணியம் சிரச்சேதம் செய்யப்பட்டார்.
- அக்டோபர் 17, 1799 அன்று கட்டபொம்மன் கயத்தாறு கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**<u>வேலுநாச்சியார்</u>**

- சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார் ஆவார்.
- இவர் 16ஆம் வயதில் சிவகங்கையின் இராஜா முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
- 1772ல் ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின் மீது போர் தொடுத்தன. அப்படை, முத்துவடுகநாதரை காளையார் கோயில் போரில் கொன்றது.
- வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து, திண்டுக்கல் அருகில் உள்ள விருப்பாச்சியில் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார்.
- பின்னர், தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர், குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார்.
- மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக்கொண்டார்.
- இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார்.

- இவர் தமிழர்களால் “வீரமங்கை” எனவும் “தென்னிந்தியாவின் ஜான்சிராணி” எனவும் அறியப்படுகிறார்.

**<u>மருது சகோதரர்கள்</u>**

- மருது சகோரர்கள் பொன்னாத்தாள் மற்றும் மூக்கைய்யா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் ஆவர்.
- மூத்த சகோதரர் பெரிய மருது. இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டனர்.
- இவர்களில் மருது பாண்டியன் என்றழைக்கப்பட்ட சின்ன மருது பிரபலமானவர்.
- ஆங்கிலேயர்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அவர் “சிவகங்கை சிங்கம்” என அழைக்கப்பட்டார்.

- சிவகங்கையை சேர்ந்த மருதுபாண்டியர் 1800- 1801-இல் ஏற்படுத்திய கிளர்ச்சி இரண்டாவது பாளையக்காரர் போர் என்று பிரிட்டிஷ் ஆவணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.
- இக்கிளர்ச்சியை ஒடுக்கியதன் மூலம் குறுநிலத்தலைவர்கள் அறவே ஒழிக்கப்பட்டனர்.
- 1801- **ஜூலை** 31-**இல்** கையெழுத்திடப்பட்ட **கர்நாடக உடன்படிக்கை** படி தமிழ்நாடு முழுவதையும் பிரிட்டிஷார் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.
- பாளையக்காரர் முறை முடிவை சந்தித்தது.
- வணிகக்குழு அவ்விடங்களில் **ஜமீன்தார்** முறையை அறிமுகப்படுத்தியது.

<u>**தென்னிந்திய கிளர்ச்சி** (1800-1801)</u>

- இப்பாளையக்காரர் போர் அதற்கு முன் நடந்த போர்களை விடவும் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றது.
- சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்பநாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது.
- இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**<u>திருச்சிராப்பள்ளி பிரகடனம்</u>** <u>(1801)</u>

- சூன் 1801ல் மருது சகோதரர்கள் திருச்சிராப்பள்ளி பிரகடனம் என்றழைக்கப்பட்ட சுதந்திரப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.
- 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது.
- இந்த அறிவிப்பின் ஒரு நகல் ஆற்காடு நவாபின் அரண்மனையான திருச்சி கோட்டை சுவரிலும், மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைஷ்ணவ கோயில் சுவரிலும் ஒட்டப்பட்டது.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை பாளையக்காரர்களின் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

**<u>ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்</u>**

- 1801 அக்டோபர் 24ஆம் நாள் மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1801 நவம்பர் 16ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர்.
- மேலும், 73 கிளர்ச்சியாளர்கள் மலாயாவின் பினாங்கிற்கு (பின்னர் வேல்ஸ் இளவரசர் தீவு என அழைக்கப்பட்டது) நாடு கடத்தப்பட்டனர்.

- 1801 சூலை 31ல் செய்து கொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி, தமிழ்நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால் பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

**தீரன் சின்னமலை**

- தீரன் சின்னமலை ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகிலுள்ள மேலப்பாளையத்தில் பிறந்தார்.
- அவரது இயற்பெயர் தீர்த்தகிரி.
- அவர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார்.
- கொங்குநாடு என்பது சேலம், கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் பகுதிகளை உள்ளடக்கிய மதுரை நாயக்க அரசின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதி மைசூர் உடையார்களால் இணைக்கப்பட்டது.
- மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது.
- தீரன் சின்னமலை, பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர்முறை பயிற்சி பெற்றிருந்தார்.
- இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கெதிராக போராடி வெற்றிபெற்றார்.
- திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலையில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார்.
- சின்னமலை காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார்.

- இறுதிப் போரின்போது சின்னமலை தனது சமையற்காரர் நல்லப்பன் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டதால் 1805ல் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

## வேலூர் கலகம்

- தமிழ்நாட்டின் முந்தைய வடஆற்காடு மாவட்டத்தின் தலைநகரம் **வேலூர்**.
- தற்போது வேலூர் மாவட்டம் என்று அழைக்கப்பட்டது.
- 1806-**இல்** வேலூரில் இருந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.
- இந்த எதிர்ப்பு வருங்காலத்தில் எழவிருந்த கலகத்திற்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது.
- 1803ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார்.
- அவரது காலத்தில் (1805-1806) சிலகட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதனைப் பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்கள் சென்னை மாகாண படைத்தளபதி சர் ஜான் கிரடாக் என்பவரால் கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- சிப்பாய்கள் அதனைத் தங்களை அவமானப்படுத்த ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டது எனக்கருதினர்.

## கலகத்திற்கான காரணங்கள்

- கடுமையான கட்டுப்பாடுகள், புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.

- தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கன்) அணிதல் ஆகியன தடை செய்யப்பட்டன.
- ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இன பாரபட்சமும் காட்டினர்.

**<u>உடனடிக் காரணம்</u>**

- சூன் 1806ல் இராணுவத் தளபதி அக்னியூ ஐரோப்பிய தொப்பியை ஒத்திருந்த சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார்.
- அது பிரபலமாக அக்னியூ தலைப்பாகை என அழைக்கப்பட்டது.
- இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் ஒன்றாக இதனை எதிர்த்தனர்.

**<u>இதர காரணங்கள்</u>**

- வணிகக்குழுவின் இராணுவத்தில் பணியாற்றிய சிப்பாய்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்தனர்.
- கண்டிப்பான ஒழுக்கம், நடைமுறை, புதிய வகை ஆயுதங்கள், புதிய வழிமுறைகள், சீருடை போன்றவை சிப்பாய்களுக்கு புதியதாக தோன்றின.
- காதணிகளை அணிவதும், சமய சின்னங்களை இட்டுக்கொள்வதும் தடை செய்யப்பட்டன.
- இனப்பாகுபாடும் காணப்பட்டது.

- 1806 மே திங்கள் வேலூர் படையின் ஒரு பிரிவினர் இவ்விதிகளை எதிர்த்தனர்.
- ஆனால் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, 500 முதல் 900 கசையடிகள் தண்டனை அளிக்கப்பட்டது.
- வேலூர் இராணுவப் புரட்சிக்கு பதே ஹைதர் மற்றும் மொய்சுதீன் இருவரும் இணைந்து திட்டம் தீட்டினர்.
- 1806 ஜூலை 10 - ஆம் நாள் முதல் மற்றும் 23-ஆம் படை பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர்.
- கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் என்பவரை புதிய சுல்தானாக அறிவித்தனர்.
- திப்பு சுல்தானின் புலிக்கொடியையும் பறக்கவிட்டனர்.
- இக்கிளர்ச்சி கர்னல் கில்லெஸ்பியினால் உடனடியாக அடக்கப்பட்டது.
- வேலூர் கலகம் தோல்வி அடைந்தது.

**<u>வேலூர் கலகத்தின் விளைவுகள்</u>**

- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.

- வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

**<u>கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்</u>**

- இந்திய படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.

- கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்தியது.
- 1806ல் நடந்த வேலூர் கலகத்தை 1857ல் நடைபெற்ற “ முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி” என வி.டி.சவார்க்கர் குறிப்பிடுகிறார்.

- வேலூர் கலகம் 1857-ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழி வகுத்தது என்ற கூற்றை மறுத்தவர் வரலாற்று ஆசிரியர் **கே.கே.பிள்ளை**.
- 1857-ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திர போருக்கு வேலூர் கலகம் முன்னோடி எனக் கூறியவர் **சவார்க்கர்**.
- இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாக திகழ்ந்தனர் எனக் கூறியவர் **என்.சஞ்சீவி**.
- காலனி ஆதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர் கலகம் என்று கூறியவர் வரலாற்று அறிஞர் **கே.ராசய்யன்**.

*************